IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 215/2015**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

NAME Gopal

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.03.2023

2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் குட்லவாரிபல்லி கிராமம். விவசாயம் செய்து வருகிறேன். 2 மற்றும் 3 ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர்கள். 1 ம் பிரதிவாதி இறந்து போன ராஜு கவுண்டர் எனது தந்தை. நான் தாவா தாக்கல் செய்த போது அவர் பெயரில் தான் தாக்கல் செய்தேன்.

2. தாவா "பி" அட்டவணை சொத்தில் 40 செண்டில் 4 ல் ஒரு பாகமாக எனக்கு பிரித்து கொடுக்க சொல்லி தாவா தாக்கல் செய்தேன். எனது தந்தை இறந்த பிறகு 3 ல் ஒரு பாகம் எனக்கு வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை இறந்து பின்ன தாவா திருத்தப்பட்ட பின்பும் நான்கில் ஒர பாகம் கேட்டு தான் தாவா திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3.தாவா "பி" அட்டவணை சொத்தை தவிர பாகம் பிரிக்கப்படாமல் சுமார் 8 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 8 ஏக்கர் நிலம் குறித்து பாகப்பிரிவினை கேட்டு தாவா தாக்கல் செய்யப்படவில்லை. தாவா "பி" அட்டவணை சொத்து வீரிசெட்டிபல்லி கிராமத்தில் உள்ளது அதன் சர்வே எண்.413/2 எ 2 ஆகும். 8 ஏக்கரின் சர்வே எண் எனக்கு தெரியாது.

4. 5 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் எனது தந்தையார் சொத்தில் எந்த பாகமும் கொடுக்கவில்லை. 8 ஏக்கர் நிலத்தை ஆண் வாரிசுகளளான கோவிந்தசாமி, வெங்கடேசன், மற்றும் சொக்கலிங்கத்தின் வாரிசுகள் மட்டும் அனுபவித்து வருகிறார்கள். அந்த 8 ஏக்கரில் பாகம் வேண்டும் என்று தாவா எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5.தாவா "பி" அட்டவணை சொத்து 40 செண்டில் ஒரு கிணர் உள்ளது. அதில் தாவா தாக்கல் செய்த போது மின் இணைப்போ, பம்பு செட்டோ தாவா சொத்தில் இல்லை. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு மின் இணைப்பு இருந்தது. அதன் சர்வீஸ் எண்.50 ஆகும். எனது தாவாவில் தாவா "பி" அட்டவணை சொத்தில் மின் இணைப்பு 7.5 எச்.பி. மோட்டார் கிணறு உள்ளது என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

6.தாவா "பி" அட்டவணை சொத்தில் 4 தென்னை மரங்கள் இருந்தது. மா மரங்கள் எதுவும் இல்லை. தாவாவில் மரங்கள் பற்றி எதுவும் சொல்லவில்லை. தாவாவில் "எ" அட்டவணையில் 2 அயிட்டங்கள் சொத்தான சர்வே எண்.116/1 1 ஏக்கர் 33 செண்ட் மற்றும் சர்வே எண்.413/1 2 ஏக்கர் சொத்து சம்பந்தமாக எனக்கு எந்த

பிரச்சனையும் இல்லை அதை நான் தான் அனுபவித்து வருகிறேன்.

7.தாவா "எ" அட்டவணை சொத்து குறித்து எந்த பரிகாரமும் தாவாவில் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா "பி" அட்டவணை சொத்தில் ஆழ்துளை கிணர் உள்ளதாகவோ, பம்பு செட்டோ, மின் இணைப்பு உள்ளதாகவும், அதில் பாகம் வேண்டும் என்றோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8.வா.சா.ஆ.5 ஆவணம் 24.11.2013 தேதியிட்ட ஒப்பந்த ஆவணம் ஆனது மின் இணைப்பு 50 லிருந்து சேஞ் ஓவர் சுவிச் வைத்துக் கொள்ள ஒப்பந்தம் போடப்பட்டது என்றும் ஆள் துளை கிணற் எனக்கு சொந்தம் என்று எழுதி தரவிவல்லை என்றால் சரியல்ல. இஅந்த வழக்கிற்காக வா.சா.ஆ.5 ஆவணம் நானே தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் கூட்டு பட்டாவாகத்தான் உள்ளது என்றால் சரிதான். கூட்டு பட்டாவில் உள்ளவர்களுக்கு எதிராக எந்த ஒரு தடை உத்திரவும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவாவில் கோரியுள்ள 1 வது பரிகாரத்திற்கும் 3 வது பரிகாரத்திற்கும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளதால் அது போல் ஒரு பரிகாரமே கேட்க முடியாது என்றால் சரியல்ல.

10.தாவா "பி" அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றாலும் எனக்கு மட்டும் 4 ல் ஒரு பங்கு வேண்டும் என்று கேட்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா "பி" அட்டவணை சொத்தில் என்னுடன் சேர்ந்து பிரதிவாதிகளும் அனுபவிக்க உரிமை உள்ளது என்றால் சரிதான். அவர்கள் என்னை தடை செய்கிறார்கள் என்பதால் தான் இத்தாவா தாக்கல் செய்துள்ளேன்.

11.பாகபிரிவினை வழக்கில் எனது தந்தையாரின் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காமல் பாக பிரிவினை கேட்பதால் பார்ஷியல் பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் இத்தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தவாவிலும் முதல் பிரமாண வாக்கு மூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.